*World Christian Fellowship*
www.wcflondon.com
wcflondon@gmail.com


# வேதம் நிறைவு தன்மை கொண்டது 02
# *Sufficiency of Scripture*

நாம் ஏற்கனவே வேதாகமம் பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்டது, பிழையற்றது மற்றும் நம்பகத்தன்மை கொண்டது என்பதை குறித்து விரிவாக பார்த்தோம்.

இப்பொழுது எப்படி வேதம் நிறைவு தன்மை கொண்டது என்பதை பார்ப்போம்.

**எபிரேயர் *4:12*, தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது**

நம்முடைய மிகப்பெரிய பட்டயமே வேத வார்த்தை தான். இது மற்ற பட்டயத்தை காட்டிலும் கூர்மையானது. தேவ வார்த்தையாய் போன்ற பட்டயம் வேறில்லை.

தேவ வார்த்தையானது

- ✓ ஜீவனுள்ளது,
- ✓ கிரியை செய்யக்கூடியது,
- ✓ வல்லமையானது,
- ✓ மற்ற பட்டயங்களை காட்டிலும் கூர்மையானது.

*தேவனுடைய வார்த்தையானது ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது.*
*ஊடுருவி பாய்கிறது.*
*இருதயத்தை உடைக்கிறது.*
*அது காரியங்களை வெளிப்படுத்துகிறது.*
*ஒரு மனிதனின் ஆத்துமாவை ஊடுருவி பாயத்தக்கது.*

***லூக்கா 11:28*, அதற்கு அவர்: அப்படியானாலும், தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள் என்றார்!"**

*எல்லா ஆவிக்குரிய தேவைகளும் தேவனுடைய வார்த்தையாய் கேட்டு மற்றும் அதற்கு கீழ்படிவதன் மூலம் கிடைக்கும்!*

***யாக்கோபு 1:23-25, என்னத்தினாலெனில், <u>ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால்</u>, கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்;***
***24. அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன்சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான்.***
***25. <u>சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிற வனாயிருந்து</u>, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.***

*யாக்கோபு இதை பூரண பிரமாணம் என்று சொல்லுகிறார். பூரணம் என்ற வார்தையை முழுமை என்றும் கூறலாம்.*

*அப்போஸ்தலர் லூக்கா கிரேக்க நாட்டில் உள்ள பெரோயா பட்டிணத்தில் உண்மையான கிறிஸ்தவர்களை அடையாளம் கண்டுக்கொண்டார்*

***அப்போஸ்தலர் 17:11, அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்***

*ஆவிக்குரிய வாழ்க்கையில் உன்னத நிலமை அடைதல் என்பது தேவனுடைய வார்தையை நாம் வாஞ்சையோடு ஏற்றுக்கொள்வதை பொறுத்தே அமையும்.*

*அவர்கள் தேவ வார்த்தையை ஏற்றுக்கொண்டு தினம்தோறும் அதை ஆராய்ந்தார்கள்.*

*ஒரு போதுமான வழக்கை வாழ வேண்டுமானால் வேதாகமத்தை வைத்துக்கொண்டு இருந்தால் மட்டும் போதாது, தேவ வார்த்தையை தினம்தோறும் ஒரு ஆர்வத்தோடு, எதிர்பார்ப்போடு ஆராய்ந்து பார்க்க வேண்டும்! இது தினந்தோறும் செய்ய வேண்டிய பயிற்சி ஆகும், ஏதோ வாரத்திற்கு ஒருமுறையோ அல்லது மாதத்திற்கு/வருடத்திற்கு ஒருமுறை செய்யும் பயிற்சி போல் அல்ல.*

*உன்னதமான ஆவிக்குரிய வாழ்க்கையை தினமும் வேதத்தை ஆராய்வதின் மூலமே பெற முடியும். அதன் மூலம் தான் வாழ்க்கையில் வரும் சவால்களை சமாளிக்க நமக்கு பெலன் கிடைக்கும், எனவே அது நமக்கு தேவையான ஒன்று.*

***கொலோசெயர் 3:16, கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி***

**சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி;**

*தேவனுடைய வார்த்தை உங்களில் அதிகமாய் நிலைத்து இருக்கு போது, நீங்கள,*

- ✓ *சந்தோஷமான வாழ்க்கை,*
- ✓ *மகிழ்ச்சி நிறைந்த இருதயம்,*
- ✓ *ஆவியில் பாடி துதிப்பது,*
- ✓ *நல்ல உறவுகள்,*
- ✓ *நல்ல திருமண வாழ்க்கை,*
- ✓ *குடும்ப வாழ்க்கையில் ஒரு முழுமை மற்றும்*
- ✓ *திருப்தியான தொழில் போன்றவற்றை பெற முடியும்.*

*உங்களுக்குள் கிறிஸ்துவின் சிந்தையும், உங்கள் இருதயத்தில் தேவ வார்த்தையும் உங்கள் சிந்தை தேவனுடைய கட்டுப்பாட்டிலும் இருந்தால் இவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.*

***1* பேதுரு *2:3,* நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்*,***

*தேவ வார்த்தையின் மேல் நீங்கள் வாஞ்சையை இருப்பதை பொறுத்து நீங்கள் இயேசுவை போல் மாற முடியும். ஒரு குழந்தை பாலுக்காக ஏங்கி காதி இருப்பது போல நாம் தேவனுடைய வார்த்தைக்காக ஏங்கி காத்திருக்க வேண்டும். உங்கள் இருதயம் அதை தினமும் நாடி தேடும் போது உங்களுக்குள் ஆவிக்குரிய பெலன் பெறுவதை நீங்கள் உணரமுடியும்.*

***2 பேதுரு 1:3, தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும். அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி,***

*அவரை அறிகிற அறிவிலே நாம் வளரும் போது அவர் தம்முடைய வார்த்தையினால் நமக்கு வெளிப்படுத்துவதை கொண்டு நம் வாழ்க்கையின் எல்லா பிரச்சனைகளையும் நம்மால் எதிர்கொள்ள முடியும்.*

*அதனால் தான் தேவனுடைய வார்தையை போதிக்க மிகவும் முற்படுகிறேன்.*

*அப்போஸ்தலன் பவுல் எபேசு சபையின் தலைவர்களுடன் சந்திப்பில் சொல்லுகிறார் நான் உங்களுக்கு இலாபமான ஒன்றையும் பிரசங்கிக்காமல் விடவில்லை என்கிறார்.*

***அப்போஸ்தலர் 20:20, பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், வெளியரங்கமாக வீடுகள்தோறும் உங்களுக்கு பிரசங்கித்து உபதேசம்பண்ணி***

*எதையும் வைத்துக்கொள்ளாமல் இலாபமான எல்லாவற்றையும் நான் உங்களுக்கு கொடுத்துவிட்டேன் என்கிறார்.*

***அப்போஸ்தலர் 20:26, தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே,***

*தேவ ஆலோசனையில் நான் எல்லாவற்றையும் உங்களுக்கு கொடுத்துவிட்டேன்.*

*இறுதியாக பவுல் அவர்களை தேவ வார்த்தைக்கு ஒப்புவிக்கிறார்.*

***அப்போஸ்தலர் 20:32, இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாகப்பட்ட அனைவருக் குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்***

*உங்களுக்கு வேண்டியது தேவனுடைய வார்த்தை மாத்திரமே! தேவனுடைய வார்த்தை உங்களுக்கு பிரயோஜனமுள்ளது மற்றும் உங்களுக்கு பெலன் தருவது ஆகும்.*

***கொலோசெயர் 2:3-4, அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக் கிறது. 4. ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன்.***

*உங்களுக்கு ஞானம் மற்றும் அறிவு சார்ந்து ஏதேனும் அறிந்து கொள்ள வேண்டுமானால் நீங்கள் அதை கிறிஸ்துவிடம் மாத்திரமே பெற்றுக்கொள்ளமுடியும். அதனால் விசுவாசிகள் வேறு எங்கும் தேட தேவையில்லை.*

***கொலோசெயர் 2:7-8, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.8. லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடு களையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல.***

*நீங்கள் அவரில் நிலைத்து இருக்கும் போது வெறும் வஞ்சகமான மற்றும் வெறுமையான கோட்பாடுகளால் அலைக்கழிக்கப்படமாட்டீர்கள்.*

***கொலோசெயர் 2:10, மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்***

*நீங்கள் கிறிஸ்துவுக்குள் முழுமை பெறுகிறீர்கள்.*

*நம்முடைய இருதயம், ஆவி மற்றும் ஆத்தும அதனுடைய முழுமை தன்மை அடைய வேண்டும் அது தேவனை அறிந்தவர்களால் மட்டுமே சாத்தியம், தேவன் நம்முடைய தேவைகளை தம்முடைய வார்த்தையின் மூலமாய் நிறைவேற்றுகிறார்.*

*அப்போஸ்தலர் யோவான் தன்னுடைய நிருபத்தில் இதை குறித்து தெளிவாக எழுதுகிறார்.*
***1 யோவான் 2:20, நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.***

*நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்று இருக்கிறீர்கள், அவரே தேவன், எனவே உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு தேவையான எல்லாவற்றையும் நீங்கள் அறிவீர்கள்.*

***1 யோவான் 2:21, சத்தியத்தை நீங்கள் அறியாததினாலல்ல, நீங்கள் சத்தியத்தை அறிந்திருக்கிறதினாலும் சத்தியத்தினால் ஒரு பொய்யுமுண்டாயிராதென்பதை நீங்கள் அறிந்திருக்கிறதினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.***

*தேவ வார்த்தையின் வெளிப்பாட்டின் மூலமாய் கிறிஸ்தவர்கள் சத்தியத்தை அறிய முடியும்.*

***1 யோவான் 2:27, நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக***

*பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு சகலவற்றையும் போதிப்பார்! நமக்கு தேவ வார்த்தை மற்றும் தேவ ஆவியின் மூலம் சகலமும் தெரியும்*

***1 தெசலோனிக்கேயர் 2:11- 13, 11. மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று,12. தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்.13. ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக் கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.***

*தேவனை கனப்படுத்தும் வகையில் அவர்கள் நடந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில் அவர்களுக்கு ஒரு தந்தை பிள்ளைகளுக்கு சொல்லுவதுபோல் அறிவுரை கூறுகிறார் பவுல்.*

நீங்கள் தேவ வார்தையை தேவ வார்த்தையாகவே ஏற்று கொண்டீர்கள், நீங்கள் அந்த தேவ வார்தையை விசுவாசிக்கும் போது அற்புதங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

தேவ வார்த்தையும் தேவ ஆவியும் நீங்கள் விசுவாசிக்கும் போது உங்களுக்காக கிரியை செய்யும்,

அது உங்களை

- முதிர்ச்சியாகும்,
- பெலப்படுத்தும்,
- உருவாக்கும்,
- வளர்க்கும், மற்றும்
- உங்களை கிறிஸ்துவை போலாக்கும்.

தேவனுடைய வார்த்தையை அதில் உள்ளபடியே நீங்கள் அதை தேவனுடைய வார்த்தையாகவே ஏற்றுக்கொண்டு உங்களை அதற்கு அர்ப்பணிக்கும் போது கிரியை செய்யும், மனுஷர் வார்த்தை என்று எண்ணும்போது அல்ல!
தேவனே நீதிமான் என்று சாட்சி கொடுத்த பூமியில் வாழ்ந்த ஒரு மனுஷன் யோபு, அவர் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம்.

பிசாசு வந்து இவரிடம் இருந்து எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டான்,

- சொத்துக்கள்,
- நிலங்கள்,
- பயிர்கள்,
- கால்நடைகள்,
- அவரின் குடும்பத்தை மோசமான முறையில் இழந்தார்,

- *தன்னுடைய சரீர சுகத்தை இழந்தார்.*

*தன்னுடைய எல்லாவற்றையும் இழந்து ஆதரவற்ற மனிதன் ஆனார். இந்த நிலையில் அவர் என்ன சொல்லுகிறார் என்று காண்போம்!*

***யோபு 23:12, அவர் உதடுகளின் கற்பனைகளை விட்டு நான் பின்வாங்குவதில்லை; அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக்கொண்டேன்.***

*தேவனுடைய வார்த்தை எனக்கு ஆகாரத்தை காட்டிலும் மிகவும் முக்கியமானது.*

***உபாகமம் 6:4-5, இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். 5. நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக."***

*இது முழு கற்பனைகளையும் உள்ளடக்கியது! ஒருவர் தேவனிடம் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழுப்பலத்தோடும் அன்பு கூர்ந்து ஆகவேண்டும்.*

***உபாகமம் 6:7-9, நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி, 8. அவைகளை உன் கையின் மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது. 9. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக.***

*நீங்கள் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ள வேண்டும்!*
*அதை உங்கள் பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டும்!!*
*அதை பற்றி உங்கள் பிள்ளைகளிடம் நீங்கள் பேச வேண்டும்*

- ✓ *நீங்கள் நிற்கும் போதும்,*
- ✓ *உட்காரும் போதும்,*
- ✓ *படுக்கும் போதும்,*
- ✓ *நடக்கும் போதும்.*
- ✓ *உங்கள் கையில் எழுதிக்கொள்ளுங்கள்*
- ✓ *உங்கள் நெற்றியில் எழுதிக்கொள்ளுங்கள்*
- ✓ *உங்கள் வீட்டின் கதவுகளில் எழுதி வையுங்கள் மற்றும்*
- ✓ *உங்கள் வீட்டின் வாயில்களில் எழுதி வையுங்கள்.*

*நாம் வாழும் வாழ்க்கைக்கு தேவையான ஒன்று: ஜீவனுள்ள தேவனனின் வார்த்தையை குறித்த விழிப்பு நமக்கு இருக்க வேண்டும் அதுதான் நம் வாழ்வின் மூலதனம்.*

***ஐஸ்வர்யவான் மற்றும் லாசரு***
***லூக்கா 16: 19-31,***
*லாசரு மரித்த பொழுது ஆசீர்வாதமான இடமான ஆபிரகாமின் மடியில் இருந்தான் மற்றும் ஐஸ்வர்யவான் மரித்த பொழுது நரகத்திற்கு சென்று துன்புறுத்தப்பட்டான்.*

***வசனம்27, அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்து பேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு ’***

*ஆபிரகாம் என்ன பதில் கொடுத்தார்*

**வசனம்*29*, ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான்.**

*மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு அதுஎன்னவென்றால் தேவனுடைய வார்த்தை அவர்களுக்கு உண்டு என்று அர்த்தம்.*

*ஐஸ்வர்யவானின் பதில்*

**வசனம்*30*, அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான்.**

*யாராவது பரலோகம் மற்றும் நரகத்திலிருந்து வந்து பிரசங்கித்தால் அவர்கள் மனம் திரும்புவார்கள். அற்புதங்களையும் அடையாளங்களையும் தேடுபவர்கள் இப்படிதான் பேசுவார்கள். சுவிசேஷம் மாத்திரம் போதாது. அற்புதங்களும் அடையாளங்களும் மற்றும் உயிர்த்தெழுதல் போன்றவைகள் மூலம் தான் மக்களை சுவிசேஷத்திற்குள் இழுக்க முடியும் என்கின்றனர்.*

**வசனம்*31*, அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்களென்று சொன்னான் என்றார்.**

*இயேசுவே அதற்கு ஒரே மெய்யான சாட்சி.உங்களுக்கு வேறு எந்த அற்புதங்களும் தேவை இல்லை.*
*ஏன்?*
*தேவனுடைய வார்த்தையானது அவ்வளவு வல்லமையானது.*

***2* தீமோத்தேயு *3:15-17, 15.* கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற**

***ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். 16. வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ள வனாகவும் இருக்கும்படியாக, 17. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.***

***வசனம்15***, *வேதம் நாம் இரட்சிக்கப்பட போதுமானது!*

***வசனம் 16***, *வேதம் நமக்கு கோட்பாடுகள் கொடுக்கிறது, நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் கற்பிக்கிறது, நம்மை கண்டிக்கிறது, நாம் சரி பண்ண வேண்டிய காரியங்களை வெளிப்படுத்துகிறது.*

*கண்டிக்கிறது என்றால் "இதை செய்வதை நிறுத்து",*
*சரி பண்ணுகிறது என்றால் "இனி இதை செய்ய ஆரம்பியுங்கள்"என்று கூறுகிறது."*

*நாம் நீதியின் பாதையில் நடக்க வேண்டிய வழிகளை கூறுகிறது, நம்முடைய புதிய பாதையில் நடக்க வேண்டிய கடைபிடிக்க வேண்டிய காரியங்களை வெளிப்படுத்துகிறது.*

***வசனம் 17***,
*அதனால் நீங்கள் முழுமை அடைந்து பரிபூரணராகி எல்லாவற்றையும் முடிக்கவும், நற்காரியங்களை செய்யவும் உதவி செய்கிறது.*

*நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஒரு முழுமையை பெற வேண்டுமானால் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து*

கீழ்ப்படியுங்கள் அப்பொழுது உங்கள் வழக்கை ஒரு முழுமை பெரும்.

வேதம் மிகவும் நிறைவு தன்மை கொண்டது...